Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (03 - 12 - 1990) திங்கட்கிழமை ஓசை 278

## வவுனியா நகரில்மட்டும் க.பொ.த. (சா/த) பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வவுனியா நகரிலுள்ள இரண்டு பாடசாலைகளில் மட்டும் க. பொ. த. சாதாரண தர பரீட்சையைப் பரீட்சைத் திணைக்களம் நடத்துகின்றது. இந்தச் செயலானது தமிழ்ப் பகுதிகளிலும் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன என்பதை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டவே நடாத்தப்படுகின்றதே அன்றி வவுனியாவில் உள்ள மாணவர்களை கல்வித்துறையில் முன்னேற்றிவிடவேண்டும் (6ஆம் பக்கம் பார்க்க)

# குரும்பசிட்டியில்நேற்றுமோதல்;

# 8 சிப்பாய் பலி; வாகனம் சேதம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியில் இருந்து குப்பிளான்நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் — புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். அவர்கள் கொண்டுவந்த புல்டோசர் சேதமடைந்தது. இழப்புக்களைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாம் திரும்பினர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

குரும்பசிட்டிப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை 5. 30 மணியளவில் கனரக வாகனங்களின் உதவியுடன் கற்கடப் பிள்ளையார் கோயில் பகுதியூடாக குப்பிளான் நோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே கடும் மோதல் இடம்பெற்றது. தொடர்ந்து இரண்டுமணி நேரம் நடைபெற்ற உக்கிர மோதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்: பலர் (6 ஆம் பக்கம் பார்க்க)

## குருமன் வெளித்துறையில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குருமன் வெளித்துறையில் நின்ற இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். நான்கு பொது மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை மண்டூரில் இருந்து களுவாஞ்சிக்குடி செல்வதற்காக குருமன் வெளித்துறையில் நின்ற சுந்தரம் பிரபாகரன் (25 வயது ஒந்தாச்சிமடம்) என்பவர் களுவாஞ்சிக்குடி முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார், குருசுத்தம்பி ரசசப்பா என்பவர் கைது செய்யப்பட்டார்.

இதே சமயம் நேற்று முன் (6 ஆம் பக்கம் பார்க்க)

## காடுகளில்அலையும் படையினர் உணவாகப் பயறும் உழுந்தும்

(மாங்குளம்)

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலின்போது முகாமிலிருந்து தப்பிச்சென்று உதிரியாகத் திரியும் இராணுவத்தினர் உணவுக்காக பயறு, உழுந்து போன்றவற்றை கொண்டுதிரிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன:

காடுகளில் மறைந்து திரியும் இவர்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியபின் இந்த விடயம் தெரியவந்துள்ளது. பலியாகிய (6 ஆம் பக்கம் பார்க்க)

## யதார்த்த கலைப் படைப்புகளை சமூகம் ஏற்கத் தொடங்கியுள்ளது

-மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

பொழுதுபோக்கு அம்சங்களையும், மனக்கிளர்ச்சியைத் தூண்டும் சினிமாப் படைப்புகளையும் தமிழ்ச் சமுதாயம் முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டதோடு சமூதாயத்தின் யதார்த்த நிலையைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டக்கூடிய கலைப்படைப்புகளையும், படைப்பாளிகளையும் தற்போது ஏற்கத்தொடங்கியுள்ளது. இது தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஏற்பட்டுள்ள முக்கிய திருப்பமாகும்.

இவ்வாறு நேற்றுக்காலை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கலை கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' பாடல் (6 ஆம் பக்கம் பார்க்க)



### "வேங்கைகளின் விடுதலை வேதங்கள்"

## கலைஞர்கள், பாடகர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

"வேங்கைகளின் விடுதலை வேதங்கள்" என்னும் ஒலிப்பதிவு நாடா அறிமுகவிழா நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் கலை கலாசார பிரிவுப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தை விடுதலைப் புலிகளின் மூத்தஉறுப்பினர் திரு. பேபி. சுப்பிரமணியம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் முன் 5 அடியில் குழி

(மாங்குளம்)

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலில் கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க் செலுத்திச் சென்ற வெடிமருந்துகள் அடங்கிய லொறி வெடித்த இடத்தில் பாரிய குழியொன்று காணப்படுகிறது. சுமார் ஐந்து அடி ஆழமுள்ள இக் குழி தண்ணீரால் நிறைந்து காணப்படுகிறது.

## இருசிப்பாய்கள் கால்களை இழந்தனர்

(மட்டக்களப்பு)

உன்னிச்சை இராணுவ முகாமில் இருந்து ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்இருவர் புலிகளின் மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று உன்னிச்சை இராணுவ முகாமில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசாவிற்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விரைவில்தீர்வுகாணவிருப்பமாம்

- பிரட்மன்வீரக்கோன்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினை, தேசிய நெருக்கடி ஆகியவற்றிற்கு விரைவான தீர்வைக் காண ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா விரும்புகிறாரென சர்வதேச அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;

தமிழர்களின் பிரச்சினை குறித்தும், தேசிய நெருக்கடி குறித்தும் பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்து அர (6 ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர் தர விசேட பரீட்சைத் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

- சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்குகிழக்கில்இந்தவருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறாமல் தடைப்பட்டிருக்கும் க. பொ.த.உயர்தரப்பரீட்சை வடக்கு கிழக்கின் ஏனைய கல்விமாவட்ட கல்வி அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்த பின்பே நடாத்தப்படும் என் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைப் பெறுபேறுகளைக் கல்விக் கோட்டத்தில் பெறவும்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பளை, காங்கேசன்துறை தபாற்கந்தோர் தொழிற்பரப்பிலிருந்து கடந்த முறை க. பொ. த. (சா. த) பரீட்சை எடுத்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளைப் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் வந்துபெற்றுக்கொள்ளுமாறு பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா தெரிவிக்கின்றார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் எழுத்தாளர்களின் நூல் வாங்க நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள எழுத்தாளர்களின் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் இம்முறையும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைக்குவந்துள்ள ஒதுக்குநிதி பயன்படுத்தப்படும் என உள்ளூராட்சி ஆணையாளர் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைக்கு நூல் கொள்வனவுக்கென 215,000 ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் யாழ். (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய பண நெருக்கடி அடுத்தமாதத்துடன் தீர்ந்துவிடும்

(யாழ்ப்பாணம்)

இப்பொழுது இருந்துவரும் ஓய்வூதியப்பணம் பெற்றுக்கொள்ள முடியாத நிலை அடுத்த மாதத்துடன் முற்றாக சீர்செய்யப்பட்டு விடும். டிசம்பர் மாத ஓய்வூதியமும் கூட டிசம்பர் மாதத்துடன் கொடுத்து முடிக்கப்பட்டுவிடும் என யாழ். செயலக ஓய்வூதியப் பகுதி பிரதம கணக்காளர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இதுபற்றி கூறுகையில் தற்போது அக்ரோபர், நவம்பர் மாதங்க (6ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுர்வேத மருத்துவத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தெற்கிலிருந்து மருந்துப் பொருள்கள் வருவது மிகக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டுள்ளதால் சனசமூக நிலையங்கள் ஊடாக ஆயுர்வேத மருத்துவத்தை ஊக்குவிப்பதற்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னேற்பாடாக சித்த ஆயுர்வேத மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்ற (6 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### ரதி வோச் வேக்ஸ்

வட மாகாணத்தில் சகல மணிக்கூடுகள் திருத்துவதிலும் விற்பனை செய்வதிலும் 50 வருட நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம். நாட்டு நிலை சீரின்மையால் ஆறுகால் மடப் ஆனைக்கோட்டையில் இயங்கி வருகிறது. (திருத்துதல் வேலைகள் வழமைபோல் நடைபெறுகின்றது.)

(B/1648)

### ஞானம்ஸ் ஸ்ருடியோ

காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரையும், கலர் பிலிம் றோல்கள் கழுவுதல், படங்கள்செய்தல், கறுப்பு வெள்ளை படங்கள் பிடித்தல் படங்களை பெரிதாக்குதல், புளொக் ஆகிய சேவைகளை தற்பொழுது வழங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம். 301 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (B/1652)

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும். ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும். றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (R/1653)

### A/L இரசாயனம்

810பிறவுண்றோட் யாழ்ப்பாணம், A/L 92 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 4-12-90 செவ்வாய் 5 P.M A/L 91 பௌதிக இரசாயனம் ஆரம்பம் 8-12-90 சனி 2 P.M (சனி, ஞாயிறு 2 P M)

(R 893)

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (R/ 888)

### காணவில்லை

பள்ளிக்குடா ஒருகரையிலிருந்து நீல நிறமுடைய 'புவனேஸ்வரி அம்பாள்' என்னும் மரவள்ளம் அடைந்து சென்று விட்டது. இவ்வள்ளத்தின் தகவல் அறிந்தவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு அறியத்தரவும், தகுந்தசன்மானம் வழங்கப்படும். சு. தெய்வேந்திரம் ஆனைக்கோட்டை சாவல்கட்டு. (R/ 891)

### தவறிவிட்டது

ஆரியகுளச் சந்திக்கும் வைமன் வீதிக்கும் இடையில் சிவப்புநிற பிளாஸ்ரிக் பேக்குடன் திறப்புக்கோர்வை தவறிவிட்டது கண்டு எடுப்பவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது குகன் ஸ்ரோர்ஸ், 180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்

(B-1660)


## சாவகச்சேரியில் ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர் கலிபர் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை இப்பகுதியில் ஹெலி பல முறை வட்டமிட்டு சரமாரியாக கலிபர் தாக்குதல் நடாத்திய போது சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியால் சென்றுகொண்டிருந்த கைதடியைச் சேர்ந்த சிறிகாந்தரூபி (வயது 19) என்ற இளம் பெண் படுகாயமடைந்துள்ளார். (க)

# வேலணை ஆஸ்பத்திரியில் மருந்துக்கு பெருந் தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

வேலணை அரசினர் கிராமிய ஆஸ்பத்திரியில் பெருமளவு மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது நீரிழிவு, தொய்வு, வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்குரிய மருந்துகளும் பென்சிலின் ஊசிமருந்துகள், பனடோல், குடற் புண்ணுக்கு பாவிக்கும் மருந்துகள், விட்டமின் குளிகைகள் என்பன போன்ற பலமருந்துகள் இங்கு இல்லை.

தீவகத்தின் மத்தியிலுள்ள இவ்ஆஸ்பத்திரியில்வாட் வசதிகளும்பி,ரசவவிடுதியுமுள்ளது. தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இந்த ஆஸ்பத்திரியின்பக்கம் யாழ்.சுகாதாரப் பணிப்பாளர் தனது கவனத்தைச் செலுத்த வேண்டுமென இப்பகுதிமக்களும்,ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையினரும் இந்தவைத்தியசாலையின் டாக்டரும் கோரிக்கை விடுக்கின்றார்கள். (15)

## யா. செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம்

யாழ். மாவட்டத்தின் திணைக்களத் தலைவர்களதும், அரச உயர் அதிகாரிகளதும் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கான மருந்துப் பொருள்கள் மற்றும் மின்சாரம் என்பனவற்றை பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டது. முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. (க)

# மாநகரசபையும்கட்டாக்காலிகள் பிடிப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி முதல் இவ்வாறான கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் யாழ். மாநகர சபை மேற்கொண்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில்கட்டாக்காலி நாய்களினால் பொது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியதும் சுகாதார சீர்கேடுகள் நிலவியதும் குறிப்பிடத்தக்கது. (க)


## அறிவித்தல்

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டியது கட்டாயமாகியுள்ளது. ஏனெனில் தகுந்த மருந்து வகைகளும், போதிய வைத்திய வசதிகளுமற்ற சூழ்நிலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து அவற்றால் கடிக்கப்பட்ட பல பொது மக்கள் அநியாய அவலச்சாவுக்கு இலக்காக நேர்ந்துள்ளது. எனவே அடையாளமற்ற நிலையில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் 05-12-90 முதல் பிடிக்கப்படும். அவற்றை பிடித்துக் கொடுப்போருக்கு ரூபா5 சன்மானம் வழங்கப்படும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி
(மாவட்டச்செயலகம்)


# ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு மேலும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களின் தேவையை கருத்தில் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் ,பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை கோரும் கேள்வி அறிவித்தல்கள் விரைவில் விடப்படும் என யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகஸ்தர் தெரிவித்தார். (லோ)

## அகதியிடம் திருட்டு

(கொடிகாமம்)

மிருசுவில் வடக்கு சனசமூக நிலையத்தில் தஞ்சம் புகுந்திருந்த அகதி ஒருவருடைய 1500 ரூபா பணம் சிறுவன் ஒருவனால் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 10.00 மணிக்கு நடைபெற்றது.

சந்தேகத்தின் பேரில் சிறுவன் வந்து திரும்பியதும் தனது பணத்தை தேடிப் பார்த்த அந்த நபர் கத்தியதை அடுத்து அயலவர்களின் உதவியுடன் சிறுவன் பிடிக்கப்பட்டான். பின்னர் அவனிடம் இருந்து பணமும் மீட்கப்பட்டது. (86)

## தீவுப்பகுதிக்கு நிவாரணம் வந்துள்ளது

(ஊர்காவற்றுறை)

தீவக மக்களுக்கு விஷேட நிவாரணமாக உலர் உணவுப் பொருள்கள் கப்பல் மூலம் வந்து சேர்ந்துள்ளன. இக்கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் நயினாதீவில் இறக்கப்பட்டுள்ளன. இப்பொருள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளில் ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை ஆகிய பகுதி உதவி அரசாங்கஅதிபர்களும்,கிராம சேவகர்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரும் ஈடுபட்டுள்ளனர். தீவகமக்களுக்கு ஏற்கனவே விஷேடமாக இரு கட்டங்களாகக் கப்பல்மூலம் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (15)

## கண்டி வீதியில் யானையின் சடலம்

(கிளிநொச்சி)

யாழ். கண்டி பிரதான வீதியில் கொக்காவில் பகுதியில் பெண் யானையொன்றின் சடலம் காணப்படுகின்றது. இந்த யானையின் மரணத்திற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை.


## ராஜா காமென்ற்ஸ்

ஸ்தாபனத்தாரின்
நம்பிக்கைத் திறன்கூடிய தரமான
றெடிமேட் ஆடைத் தினுசுகள்...
இன்றைய நவநாகரிக முறைகளில்.
ஆடவர் நங்கையர் மழலைகள்
அனைவரின் தேவைக்குகந்த வகையில்
மொத்தமாகவும் சில்லறையாவும் பெற்றுக்கொள்ளலாம்.
(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு)

விபரங்கட்கு:

யோகாஸ்
இல. 16, பெரியகடை,
யாழ்ப்பாணம்,

குமார் புடைவை மாளிகை
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

(B/1655)


## 100 நாய்கள் கொல்லப்பட்டன

(மல்லாகம்)

நேற்று முன்தினம் காலை மல்லாகம் நீதி மன்றப் பகுதியில் வைத்து பொது சுகாதாரப் பரிசோதகரால் பொது மக்களின் ஒத்துழைப்புடன் 100 க்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் கொல்லப்பட்டன. (ச)

## ஒயில் திருடர்கள் பிடிபட்டனர்

(சுராலி)

நேற்று முன்தினம் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமானதும் பொன்னாலைப் பகுதியில் அமைந்துள்ளதுமான டிரான்ஸ்போமரில் இருந்து ஒயில் களவாடிய நால்வர் அப்பகுதிப் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். பின்னர் அவர்கள் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியிடம் ஒப்படைக்கப் பட்டனர். (20)

## சங்கிலித் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலில் சிறுபிள்ளை ஒன்றின் தங்கச் சங்கிலியை திருடிய சிறுவன் ஒருவன் கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளான்.

இக்கோயிலில் தனது தாயுடன் வந்த சிறுபிள்ளையின் தங்கச் சங்கிலியை, தாய் கடவுள் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த சமயம் சிறுவன் ஒருவன் திருடிச் சென்றதை அங்கு நின்ற ஒருவர் பார்த்ததைத் தொடர்ந்து இத்திருட்டு கையும் மெய்யுமாக பிடிபட்டது


வகுப்புகள் மீண்டும் 7-12-90 முதல் ஆரம்பமாகின்றன.

# கலாலயா

யாழ்நகர். (B/ 1654)



# 41ஆம் நாள் நினைவஞ்சலி



தெல்லிப்பளையை பிறப்பிடமாகக் கொண்ட

## திரு. இராசா ரயீந்திரன்


மலர்வு: 19-04-59 உதிர்வு: 24-10-90

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த என் அருமை மைந்தனே! நீ மறைந்து இன்னும் எங்கள் கண்முன்னே நடமாடுகிறாய். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, உனது மரணச்சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைக் கூறுகின்றோம்.

தகவல்
திருமதி சரஸ்வதி இராசா.
(சுன்னாகம் நூல்நிலையத்திற்கு அருகாமையில்.)

(R/ 889)

# தகர்க்கப்பட்ட மாங்குளம் இராணுவ முகாம்



"காட்சிக்கு வைக்கப்பட்டவை" அல்ல
களத்தில் பெறப்பட்டவை!



ப்டன்
கரன்



வீரவேங்கை
ரசிக்கா




காவியம்படைத்த "போர்க்" இன்
கம்பீரத் தோற்றம் காணீர்!




மாப்பாணர் மகன் இன்று
மண்ணின் மைந்தனானான்!


மாவீரர் வாரத்தில்
மக்கள் மகிழ்ந்திருக்க
மாங்குளத்துக் காட்டினிலே
எதிரிகளின் பாசறையை
தேடிச் சென்றவர்கள்
குவித்த வெற்றியின்
சாட்சியங்கள் பாரீர்!
படைசேர வாரீர்!!



புலிகள் புகுந்ததன் விளைவிதோ?
எலிகள் குடிகொண்ட நிலையிதோ?





சிரிப்பாய்ச் சிரித்த கதை
சித்திரமாய் வந்ததிங்கு!



"இங்கே ஆயுதங்களின் குவியல்கள்"
விடுதலையின் வெற்றிப்படிகள்!





கொள்ளை கொண்டவர் (எங்கள் மண்ணை)
கொலையுண்டு கிடக்கிறார்!



வீரத்தின் சுவடுகள் இங்கே
ஆழப் பதிக்கப்படுகின்றன
(தளபதிகள் பால்ராஜ், சூசை......)



இடிந்தது இலங்கை அரசின் கோட்டையா?
முடிந்தது "பாதுகாப்பவர்" சேட்டையோ?

### சிந்தனைக்கு

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே

— அதிவீரராமபாண்டியர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2209
த.பெ.எண் 05


# முன்னுதாரணமாகிய மூத்தவர்கள்!

மாங்குளத்தில் இருந்து தப்பி ஓடிய சிறிலங்கா சிப்பாய் ஒருவனை தனது துணிகர நடவடிக்கையால் மடக்கிய வயோதிபர், அந்த நடவடிக்கையின்போது ஏற்பட்ட காயத்தினால் மரணமடைந்துவிட்டார். இந்த வயோதிபரின் வீரம் போற்றப்படக்கூடியது. இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு வழிகாட்டக் கூடியது.

இதேபோன்று ஆயுதத்துடன் வீட்டிற்குள் புகுந்து மிரட்டிய சிங்கள சிப்பாயை பதற்றமடையாது, தனது புத்தி சாதுரியத்தால் மடக்கிய பாட்டியின் செயலும் தமிழ் மக்களுக்குச் சிறந்த படிப்பினையாகவுள்ளதோடு, சில விடயங்களையும் உணர்த்துகின்றது.

இவ்விரு வயோதிபர்களுக்கும் இந்தத் துணிகரச் செயலைச் செய்வதற்கு நம்பிக்கையும், துணிவையும் கொடுத்தது இன்று போராட்டத்தின்மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கையே ஆகும். தற்போதைய போராட்டம் அவர்களுக்கு அனுபவ ரீதியாகக் கொடுத்த நம்பிக்கையே அவர்களை இவ்வாறு செய்யத் தூண்டியது. அதாவது போராட்டம் பால், வயது வேறுபாடின்றி மக்கள் மயப்பட்டு வளர்ந்துள்ளது. மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது என்பதே இந்தச் சம்பவங்களின் வெளிப்பாடாகும்.

உலகின போராட்ட வரலாறுகளில், போராட்டத்தின் மீதுள்ள உணர்வும், நம்பிக்கையுமே போராட்டங்களை வெற்றி கொள்ளச் செய்துள்ளன. இவை இரண்டும் இருக்கும் பட்சத்தில் போராட்டத்தில் வயது, பால் போன்ற எல்லைகள் கடக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக லிபியா விடுதலைப்போரில் தலைமை தாங்கிய ஓமார் முக்தார் அறுபது வயதைத் தாண்டியவர். அவருடன் கூட இருந்தவர்களின் அநேகர் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட வயதை உடையவர்கள்.

இன்று ஆப்கானிஸ்தானில் அரசிற்கெதிராகப் போராடும் கெரில்லாக்களில் அநேகமானவர்கள் முப்பது வயதிற்கு மேற்பட்டவர்கள், ஐம்பது வயதிற்கு மேற்பட்ட முஜாயிதீன் கெரில்லாக்களும் குறிப்பிடக்கூடிய அளவில் உள்ளனர். அதாவது போராட்டத்திற்கு வயதெல்லை ஒருதடை இல்லை என்பதையே இவை உணர்த்துகின்றன.

பொதுவில், தேசிய இனப் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் எதிரியைவிட மக்கள் தொகையிலும், வசதி வாய்ப்புக்களிலும் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். இந்த நிலையில் அடக்கப்பட்ட இனத்தில் இருந்து போராட்டம் வெடிக்கும்போது அந்த மக்கள் சிறியவர்களில் இருந்து முதியவர்கள் வரை போராட முன்வர வேண்டும். அப்பொழுதுதான் சிறுபான்மை இனம் தனது விடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். இதற்கு சிறந்த உதாரணம் ஒன்றைப் பாலஸ்தீனத்தில் குறிப்பிடலாம். பாலஸ்தீனத்தின் காசாப் பகுதியில் பாலஸ்தீனக் குழந்தைகளினால் இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு அடிக்கடி தொல்லைகள் ஏற்படுகின்றன. அதாவது அடக்குமுறையாளர்கள் மீது குழந்தைகளே தங்கள் வெறுப்பை தங்களால் இயன்ற அளவில், இயன்ற முறையில் காட்டுகின்றனர்.

ஆக்கிரமித்த பகுதியைக் காப்பாற்றுவதற்காக கிழக்கிலங்கையில் சிறிலங்கா அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட ஊர்காவற்படையில் வயது வேறுபாடு இன்றிச் சகலரும் உள்ளனர். இதனை வெளிக்காட்டுமாப் போல் அண்மையில் அறுபதுவயதிற்கு மேற்பட்ட ஒரு சிங்கள ஊர்காவற்படையின் படத்தை 'டெய்லி நியூஸ்' பத்திரிகை முன் பக்கத்தில் பிரசுரித்திருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை பாதுகாப்பதற்கு சிங்கள இராணுவமும், ஊர்காவற்படையும் சிறிலங்கா அரசாங்கத்தின் முழு ஆசீர்வாதத்துடன் செயற்படும்போது சிறுபான்மையினரான எமக்கு முதியவரினதும், சிறுவர்களினதும் பங்கு கட்டாயம் தேவை. அதனை இன்று எமது முதியவர்களும் உணர்ந்து போராட்டத்திற்கு ஆதரவு நல்குவதும், ஈடுபடுவதும் தமிழ் மக்கள் தமிழீழ போராட்டத்தில் உணர்வுபூர்வமாக இணைந்து கொண்டு உள்ளனர் என்பதை வெளிக்காட்டுகின்றது.

ஆனால், வயோதிபர்களும், சிறுவர்களும் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ள முற்படும் இந்த வேளையில், ஒருபகுதி இளைஞர்கள் போராட்டத்தில் இணையாது விலகி ஒடுவது ஆச்சரியமளிக்கும் விடயமாக உள்ளது. ஏன் இவ்விளைஞர்கள் விலகி ஓட வேண்டும்?

இன்றைய நிலையில் போராட்டம் நம்பிக்கை அளிக்கவில்லை. ஆகையினால் ஆகப்போவது யாதுமில்லை என்று கூறுவதற்கு காரணம் ஏதுமில்லை. போராட்டம் வளர்ச்சிப் போக்கில் செல்கின்றது. இன்று உலகில் நடக்கும் விடுதலைப் போராட்டங்களில் செயற்பாடு மிக்கதாகவும், கூர்மையுள்ளதாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் இந்தத் தமிழீழப் போராட்டமே.

இந்த நிலையில் இராணுவத்தை மடக்கியவயோதிபரின் செயற்பாடு இளைஞர்களுக்கு வழிகாட்டக் கூடியது. பயிற்றப்பட்ட ஆயுதம் தரித்த ஒரு இளம் சிப்பாயை தனது வயதுபோன நிலையிலும் தனது துணிவு ஒன்றை மட்டும் கொண்டு வயோதிபர் மடக்கினார். எதிரி இனப்படு கொலைகளைப் புரியும் போது பால், வயது வேறுபாடு இன்றி எவ்வாறு நடந்து கொள்கிறானோ அதே போன்று நாம் ஆக்கிரமிப்பாளனை எதிர்க்கும் போது ஒன்றுதிரண்டு எதிர்க்க வேண்டும். அப்பொழுதுதான் எமது மண் விரைவில் விடுதலை பெறும்.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



ஆற்றங்கரையிலிருந்து திரும்பி வந்தோம். மகிழடித் தீவுச் சந்தியில் லான்ட்குறோசரை நிறுத்தினார் கரிகாலன். அங்கு நின்றவர்களில் ''மகசன்'' என்று அழைக்கப்படுபவரோடு உரையாடத் தொடங்கினேன். என்ன மக்கள் எல்லாரும் படுவானுக்க வந்திட்டீர்கள்? மறுகா என்ன செய்யிற. காம்பெல்லா போட்டுட்டானுகள். ஏன் படுவானுக்கை ஆமி வரானோ? இங்கெ வாறதெண்டா எப்பாலுமிருந்துதான். ஆரைப் பத்தேல நாளாந்தம் எல்லோ ஆமியைக் காணோணும். அத விட ரெலோக்காறன் திரியிறான். ரெலோவால் பிரச்சினையா? மறுகா... பார்காற (Bar) கன்னன் தம்பிராசாற்ற மகன் பாங்கிலே வேலை செய்யிறவர். அவரையுமெல்லோ சுட்டுட்டானுகள். ஏன் சுட்டாங்கள்? லக்ஸ்மனும் நீலனும் வாறவங்களோண்டு கேட்டானுகள். ஏதோ மறுமொழி சொன்னான் இவன். கடைசியில் சுட்டுப் போட்டானுகள். ஆர் இப்ப ரெலோவுக்கு பொறுப்பு? வேட்டோவோ போட்டோவோ.. எண்டுதான் சொல்றானுகள். ஆரைப்பத்தையில ஆர் பொறுப்பு? அவன் கிழவிறவி சரி இங்கை வந்திருக்கிறீர்களே உங்கட குடும்பம் எல்லாம் என்ன மாதிரி? ஊரில தான். அப்ப தொழில்? தொழில் செய்யக் கூடிய நிலைமையே. ஆத்துக்கு போகலாம் தானை? ஆத்துக்க இறங்கினா ஆமி சுட்டுப் போடுவான். மண்முனைத் துறையையே பாவிக்க வேண்டாமெண்டு சொல்லியிருக்கிறான். அப்ப ஆத்தில தொழில் செய்யிறவை பாடு? ஒருத்தருக்கும் தொழில் இல்ல. முஸ்லிம் ஆக்கள் மீன் பிடிக்கிறாங்களோ? அவங்கள் காத்தான்குடிப்பக்கமாக புடிக்கிறானுகள். சரி பிள்ளைகள் பாடு எப்படி? பிள்ளையள்... பிள்ளையள்... என்னத்தைச் சொல்ல இப்பிடியே சீரழியிறம். கண்கள் கலங்கச் சொல்கிறார். தொண்டை அடைத்துக்கொள்கிறது.

மக்களிடமும் மற்றவர்களிடமும் விடை பெறுகிறோம். அம்பிளாந்துறை, பழுகாமம் போன்ற இடங்களையும் பார்த்தோம். அம்பிளாந்துறையில் ஏராளமான வீடுகள் தீயிடப்பட்டிருந்தன. பெரியபோரதீவு, முனைத்தீவுப் பகுதிகளுக்குச் சென்றோம். அங்குதான் மின்சாரம் இருந்தது. கிட்டத்தட்ட மூன்றுமாத காலத்தின் பின் மின்சார விளக்கு எரியும் வீடுகளைக் கண்டோம். அங்கி

## 29

ருந்து புறப்பட்டு கோயிற்போரதீவு, வெல்லாவெளிப் பகுதிகளுக்குச் சென்றோம். எம்மால் தகர்க்கப்பட்ட வெல்லாவெளிப் பொலிஸ் நிலையம் இருந்த பகுதியைப் பார்வையிட்டோம். இனி தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் சிவில் நிர்வாகம் என்பது பகல் கனவுதான் என்பதை தகர்ந்திருந்த அக்கட்டிடங்கள் உறுதிப்படுத்தின. அங்கிருந்து பாலையடி வெட்டைப் பக்கமாகப் போகும்போது எங்களுடன் வந்த மண்டலம் என்பவர் ''இவடத்தைதான் றீகண்ணை செத்தவர்'' என்று ஒரு இடத்தைக் காட்டினார். மட்டகளப்பு மாவட்டத்தில் படையினருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய அந்த மாவீரன் மறைந்த இடத்தில் சிறிது நேரம் தங்கியிருந்தோம்.

பாலையடி வெட்டையில் நிற்கும்போது வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. பக்கியெல்ல கிராமத்தின் சிங்கள ஊர்காவல்படையினர் இவ்வாறு அடிக்கடி சுட்டுக் கொண்டிருப்பது வழக்கம் என்றார் கரிகாலன். அங்கிருந்து காக்காச்சி வெட்டை என்னும் இடத்தைச் சென்றடைந்தோம். அங்குள்ள அகதிகள் முகாமில் பெரும்பாலான குழந்தைகள் நிர்வாணமாகவே காணப்பட்டனர். போஷாக்கின்மை அவர்களின் தோற்றத்தில் தெரிந்தது. இடுப்பில் ஒரு குழந்தையுடன் ஒருகிழவி காணப்பட்டார் அவரிடம் சென்றேன். ஆச்சி உங்கட பேர் என்ன? என்று கேட்டேன். ''கந்தப்பர் தங்கமுத்து'' என்றார். இந்தப் பிள்ளை? என்று வினவினேன். ''பேத்தி - என்ட மகளட புள்ள'' என்றார். உங்கட சொந்த இடம் எது என்று கேட்டேன். ''37'' என்றார். 37 என்றால் என்று கேட்டேன். ''37ஆம் கொலனி, நாசிவன் வெளி'' என்றார். இந்தப் பிள்ளையின் தகப்பன் எங்கை? என்று கேட்டேன். ''சுட்டுப் போட்டானுகள் சிங்களவனுகள், அவன்... சுட்டவனை என்னட்டத்தந்தா சப்பித்தின்னுவன்'' என்றார்.

(தொடரும்)



மட்டக்களப்பு ஆயுதங்கள் கோட்டையைப் பிடிக்க உதவியதாமே! எங்களைக் காப்பாற்ற நீங்கள் என்ன செய்யப்போவதாக உத்தேசம்?

யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களில்

# அரச வைத்திய அதிகாரிகள் ஓய்வுபெற விண்ணப்பம்

சிறிலங்கா அரசினால் கொண்டுவரப்பட்ட புதிய ஓய்வூதியத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பெரும்பாலான பதிவு பெற்ற அரச வைத்திய அதிகாரிகள் (ஆர். எம். ஓ) ஓய்வுபெற சுய விருப்பத்தின் பேரில் உத்தேசித்துள்ளதாகவும், இதன் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பங்களை யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அநேக கிராமப்புறங்களிலுள்ள அரசினர் மத்திய மருந்தகங்களில் பொறுப்பதிகாரிகளாகப் பதவி வகித்து வரும் வைத்திய அதிகாரிகளும் இவர்களில் அடங்குவர்.

வருங்காலத்தில் தமக்கு வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வரலாம் என்று கருதியே பெரும்பாலான பதிவு பெற்ற அரச வைத்திய அதிகாரிகள் இந்த ஓய்வூதியத் திட்ட சுற்றறிக்கையைப் பயன்படுத்திப் பதவியிலிருந்து ஓய்வுபெற விரும்புவதாகவும் கருதப்படுகிறது.

(24

## இராம ஜென்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினை

# பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க சம்பந்தப்பட்டோர் இணக்கம்

(டில்லி)

இராம ஜென்மபூமி, பாபர் மசூதிப் பிரச்சினையை அமைதியான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு பாபர் மசூதி நிர்வாகக் குழுவினரும் விஸ்வஹிந்துபரிஷத்தும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இடம்பெற்ற இரு தரப்பினருக்குமான கூட்டத்தின் முடிவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தக் கூட்டத்திற்கு இந்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய், உத்தரப் பிரதேச, ராஜஸ்தான், குஜராத் முதலமைச்சர்களும் கலந்துகொண்டனர். அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை மீண்டும் நாளை புதுடில்லியில் நடைபெறும்.

முன்னதாகப் பாரதிய ஜனதாக் கட்சி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்து, முஸ்லிம் சமயத் தலைவர்களிடையே நேர்முகப் பேச்சுக்கள் நடைபெற வேண்டுமென்று யோசனை கூறியிருந்தது.

இரு சமய அமைப்புக்களின் அறிவிப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட பாரதிய ஜனதாக் கட்சி 40 வருட காலமாகத் தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினையின் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த திருப்பமாக இந்தக் கூட்டம் அமைகிறது என்று குறிப்பிட்டது.

பாபர் மசூதி நிர்வாகக்குழு கருத்து வெளியிடுகையில் அயோத்திப் பிரச்சினையைத் தீர்ப்பதில் விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் திருப்தியளித்திருப்பதாக அறிவித்தது.

இப்போதைய முத்தரப்பு பேச்சுக்களில் முன்னேற்றம் தென்படுகிறது எனவும், சுமூகமான தீர்வொன்றையே தாம் விரும்புவதாகவும் விஸ்வ ஹிந்து பரிஷத் அறிவித்துள்ளது.

இதேவேளை அயோத்தியில் இராமர் கோயிலில் நடைபெறவிருக்கும் இந்துக்களின் திருப்பணிவேலைகள் அமைதியான முறையிலேயே இடம் பெறும் என விஸ்வ ஹிந்து பரிஷத் அறிவித்துள்ளது.

## பிரிட்டன் - பிரான்ஸ் சுரங்கப்பாதையால் இணைப்பு

(லண்டன்)

பிரான்சையும், பிரிட்டனையும்பிரிக்கும் ஆங்கிலக் கால்வாயின் கீழ் தோண்டப்பட்ட சுரங்கத்தின் இரு பகுதியும் சந்திப்பு நேற்று முன்தினம் ஏற்பட்டது. இச் சுரங்கப் பாதை இருபத்துமூன்றுமைல் நீளமான ஆங்கிலக் கால்வாயின் கீழ் உள்ள தரைப் பரப்பிற்குக் கீழ் தோண்டப்பட்டது. இச் சுரங்கப்பாதை அமைப்பதற்காக 30 ஆயிரம் தொன் பாறைகள் அப்புறப் படுத்தப்பட்டன.

## காட்டில் இளைஞன் சடலம் கொள்ளையர்என சந்தேகம்

(கிளிநொச்சி)

அடர்ந்த காட்டின் நடுவே இளைஞன் ஒருவனின் சடலம் சிதைவுற்ற நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வவுனிக்குளம் மக்கள் வீதிகளில் சோடனைகளைச் செய்வதற்கு கம்பு, தடிகளை வெட்டுவதற்காக அம்பாள் குளம் காட்டிற்குச் சென்ற போதே இந்தச் சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் பாண்டியன் குளம் பகுதிப் பிரதேசப் பொறுப்பாளர் நிமாலுக்கு அறிவிக்கப்பட்டதும், பிரதேசப் பொறுப்பாளர் அவ்விடத்திற்குச் சென்று பார்வையிட்டபோது அங்கு ஒரு கூடாரம் அமைக்கப்பட்டு கொள்ளைக் கோஷ்டி ஒன்று அங்கு வசித்ததற்கான தடயங்களைக் கண்டுபிடித்தார்.

பால்மா, மீன்ரின், அரிசி, மரக்கறிச் சாமான்கள் போன்ற பல பொருள்களும், சமையல்பாத்திரங்கள் அடுப்பு போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டன.

பின் இளைஞனின் சடலம் விடுதலைப் புலிகளால் அடக்கம் செய்யப்பட்டது. இது சம்பந்தமாக திரு. பிரசாந் கருத்துத் தெரிவிக்கையில்;

அவ்விடத்தில் ஒரு கொள்ளைக் கோஷ்டி இருந்ததாகவும், அவர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் தெரிவித்தார். (49)

## பெண் மரணம்

நஞ்சு விதையை உட்கொண்டதால் இளம்பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

உரும்பராயைச் சேர்ந்த வி.ரஞ்சினி (வயது 18) என்ற இளம்பெண்ணே மரணமடைந்தவராவார். (க)

## மாநாடு

யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் கணக்காய்வுப் பிரிவைச் சேர்ந்த சகல வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான மாநாடு வரும் புதன்கிழமை 5ஆம் திகதி காலை 10 00 மணிக்கு திணைக்கள அலுவலகத்தில் நடைபெறும் என்று யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வுப் பகுதி) மா. கனகசபை அறிவித்துள்ளார். உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

## செய்முறைப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. கடந்த சில மாதங்களாக யாழ் வைத்திய சாலை சீராக இயங்காமல் இருந்தமையால் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறாமல் தடைப்பட்டிருந்தன. (க)

## லொறிமோதி வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியால் வேகமாக வந்த லொறிஒன்று அரசடிவீதியால் தட்டாதெரு சந்தியில் திரும்பிய வயோதிபரை மோதியதில் உடல் சிதறியநிலையில் அந்த வயோதிபர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார்.

கந்தசாமி என்ற நாயன்மார் கட்டைச்சேர்ந்த நபருக்கே நேற்றுக்காலை இக்கதிநிகழ்ந்தது. (லோ)

## தாதிமாரின் ஊக்குவிப்புப்படி 5 மாதம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை தாதிகள் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுவரும் தாதி மாணவர்களுக்கு வழங்க வேண்டிய ஊக்குவிப்புப்படி கடந்த ஐந்து மாதங்களாக வழங்கப்படவில்லை.

இந்த ஊக்குவிப்புப் படியை வழங்குவதற்கு மேற்படி பயிற்சி நிலையமும், வைத்திய சாலை நிர்வாகமும் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என இங்கு பயிலும் மாணவர்கள் பலர் வருத்தம் தெரிவித்தனர். (க)

## நாய்களுக்கு தடுப்பூசி

(மல்லாகம்)

இன்று காலை 9 மணிக்கு மல்லாகம் நீதிமன்ற கட்டடத்தில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி போடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. அண்மைக் காலங்களில் விசர்நாய் கடியால் பலபொதுமக்கள் இறந்த காரணத்தாலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (ச)

ஆயுர்வேத

வைத்தியர்களை ஒன்று சேர்த்து ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்பட்டும் உள்ளது. அத்துடன் நெடுந்தீவு, நாரந்தனை, ஆனைக் கோட்டை, நீர்வேலி, சங்கானை ஆகியவை உட்பட கைதடி சித்த ஆயுர்வேத பல்கலைக்கழகத்திலும் இதற்கான மூலிகை வளர்ப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (லோ)

ஒய்வூதிய

ளுக்கான ஒய்வூதியங்கள் கொடுக்கப்படாத நிலையில் உள்ளது. மேலும் முதன் முறையாக ஒய்வூதியத்திற்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோர் இருநூறு பேருக்கு மேலும் ஒய்வூதியம் பெறும் பிரச்சினைகள் உள்ளது. இந்த இருநூறு பேரது மூலப்பிரதிகளும் எமக்கு வந்ததும் இவர்களது ஒய்வூதியம் வழங்கப்படும் என்றார்.

அத்துடன் தற்போது நிலவும் ஒய்வூதியம் சம்பந்தமான பிரச்சினைகளும் மற்றும் வங்கிகளுக்கு ஒய்வூதியப்பணத்தை அனுப்பி லைப்பது சம்பந்தமாக சில நடவடிக்கைகளை செய்வதற்கு ஒரு அதிகாரியை தாம் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இறுதியாக செப்ரெம்பர் மாத அனைத்து வங்கி வவுச்சர்களும் தபாலில் சேர்த்து விட்டதாக அவர் தெரிவித்தார். (லோ)

வவுனியா நகரில்

என்பதற்காகவல்ல என யாழ் மாவட்ட கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தள்ளார்.

அவர்மேலும்இந்தநிலைமை பற்றி கூறும் பொழுது பாவற்குளம், செட்டிகுளம், நெடுங்கேணி, புளியங்குளம், ஒமந்தை, கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சாதாரணதர மாணவர்களுக்கு அதே வவுனியா மாவட்டகல்வித்திணைக்களம் பரீட்சை வைப்பது பற்றி சிந்திக்கவில்லை என்றும் கூறினார்.

இவ்வாறு இராணுவ அச்சுறுத்தல்களால் மனம் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு பரீட்சை நடத்துவது என்பது பொருத்தமான நேரத்தில்யில் சோதனை நடாத்துவதாகாது எனவும் அவர் கூறியுள்ளார்.

தென்னிலங்கை முழுவதும் 1990 ஆம் ஆண்டுக்கானகல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சைகள்இன்று ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் வடபகுதி மாணவர்கள் இன்னும் விண்ணப்பங்களையே தயார் செய்யாத நிலையில் உள்ளனர்.

இதேவேளை கிழக்குமாகாணத்தில் இராணுவ கட்டுப்பாட்டிற்குள இருக்கும் பகுதி பாடசாலைகளில் இருக்கும் அகதிகளைவெளியேற்றி அங்கு மாணவர்களுக்கு பரீட்சை நடாத்தப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசஅதிபர் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

யதார்த்த

ஒலிப்பதிவு நாடாவின் அறிமுகவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திர ராசா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கலை இலக்கியங்கள் உள்ளத்தை ஆக்கிரமிக்கும் உன்னத கருவியாகவும், உண்மையான சமுதாயப் பிரச்சினைகளைத் தெளிவாக உலகிற்கு அடையாளமிட்டுக் காட்டும் கண்ணாடியாகவும் அமைந்து நிற்கின்றன. எமது போராட்டத்தை அடுத்த சந்ததிக்கு ஒப்புக் கொடுப்பனவும் இந்தக் கலைப்படைப்புகளே. எனவே கலைஞர்கள் அனைவரும் தம் பொறுப்பை உணர்ந்து இந்த புனித கடமையை நிறைவேற்ற முன்வர வேண்டும் என்றார். (மு)

கலைஞர்கள்

இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ராஜன், மகளிர் முன்னணியின் பொறுப்பாளர் மாலினி, விடுதலைப் புலிகளின் மக்கள்முன்னணியின் செயலதிபர் யோகரத்தினம் யோகி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் கோ.மகேந்திர ராசா ஆகியோர் முக்கியஉரையாற்றினார்கள்.

'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' ஒலிப்பதிவு நாடாவின் அறிமுகவுரையையும், சிறப்புரையையும் திருவாளர்கள் நா. சுப்பிரமணிய சர்மாஅவர்களும்இ.ஜெயராஜ் அவர்களும் வழங்கினார்கள்.

இந்த அறிமுக விழாவில் "வேங்கைகளின் விடுதலை வேதங்கள்" ஒலிப்பதிவுநாடா வெளியீட்டில்பங்களிப்புசெய்த இருபது கலைஞர்கள், பாடகர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் முகமாக சிறுபரிசுகள் வழங்கப்பட்டன. இப்பரிசுகளை யாழ். மாவட்ட தளபதி பானு வழங்கினார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவரின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவெய்தியது.

இரு சிப்பாய்கள்

இருந்து முரசவீதியினூடாக புல்லுமலை நோக்கிச் சென்ற சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் புலிகளின் மிதிவெடியில் தமது கால் ஒன்றை இழந்தார். நேற்று முன்தினமும்இதே உன்னிச்சை முகாமில் இருந்து அரைமைல் தூரத்தில் உள்ள கோப்பாவெளியில் புலிகளின் மிதிவெடியில்சிக்கிய இன்னுமொரு இராணுவச் சிப்பாயும் தனது காலை இழந்துள்ளார். (மு)

குரும்பசிட்டியில்

காயமடைந்தனர். இவர்கள் தமது பாதுகாப்பிற்காகக் கொண்டுவந்த புல்டோசர் ஒன்று புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலால் பலத்த சேதமடைந்துள்ளது. இந்த மோதலையடுத்து இறந்த இராணுவத்தினரின் உடல்களையும், ஆயுதங்களையும், வாகனத்தையும் கைவிட்டுவிட்டு இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர்.

இறந்த இராணுவத்தினரின் உடல்களும் ஆயுதங்களும் இருபகுதியினரதும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் காணப்படுவதால் இதுவரை அவற்றை மீட்க இருபகுதியினராலும் முடியவில்லை எனத்தெரிய வருகிறது. இதனைத் தொடர்ந்து குரும்பசிட்டி, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ச)

பரீட்சைப்

மேற்படி இரண்டு பிரதேசங்களிலும் நிலைமை சீரில்லாமையாலும், அப் பகுதியில் அநேக மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாலும் கோட்டத்திற்கு வந்து அடையாள அட்டையைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார்.

கோட்டநிதி அதிகாரி திரு. வெற்றிவேலு அவர்கள் பரீட்சார்த்திகளின் நலன்கருதித் தினமும் அலுவலகம் வந்து செல்கின்றார் என்றும் தெரிவித்தார். (12)

விசேட பரீட்சைத்

தும் வடக்கு - கிழக்கு கல்வி மாவட்டங்களிற்கான இந்த விசேட பரீட்சைக்கான திகதி இது வரை தீர்மானிக்கப்படவில்லை என்று யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (க)

தமிழ் மக்களின்

சியல் கட்சிகளின் தேசிய நலன் கருதிய ஒத்துழைப்பு அவசியமெனவும் ஜனாதிபதி கூறியுள்ளாராம்.

தமிழ்,முஸ்லிம் கட்சிகளுக்கு வடக்குக் கிழக்குப் பிரச்சினை தொடர்பாக நீதியான அரசியல் தீர்வைக் காணுமாறும் அந்தத் தீர்மானத்தைத் தான் அமுல்படுத்தத் தயார் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்று பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

குருமன்

தினம் இந்த இடத்தில் நின்ற முத்துவேல் கனகலிங்கம் (27 வயது வெல்லா வெளி), தங்கராசா (மகளூர் முனை), கோபாலன் என்பவரின் மகன் (மகளூர்முனை) ஆகிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (மு)

உள்ளூர்

மாநகரசபைக்கு 25,000 ரூபாவும்சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய மூன்று நகரசபைகளுக்கு 60,000 ரூபாவும் ஏனைய 12 பிரதேச சபைகளுக்கும் 1,30,000 ரூபாவும் நூல் கொள்வனவுக்காக வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

காடுகளில்

இராணுவத்தினரின் காற்சட்டைப் பைகளில் இவ்வாறு பயறு, உழுந்துகள் காணப்படுகின்றன. வவுனியா பகுதிகளில் உழுந்து, பயறு கூடுதலாகப் பயிரிடப்படுவது தெரிந்ததே.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.